இந்திய உச்சநீதிமன்றம்

2021 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 05 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.எண்.வி. ரமனா,

மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.அப்துல் நசீர்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்ய காந்த்

உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 19-20/2021

கீர்த்தி மற்றும் ஒருவர் இன்னும் பிறர்

எதிர்

ஓரியண்டல் காப்பீட்டு வரையறுத்த பங்கமைப்புக் குழுமம்

மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988: கேட்புரிமைகள் மற்றும் சட்டப் பொறுப்புகள் விபத்து நடந்த போதே நிர்ணயிக்கப்படுகிறது - அதன்பின்னர் ஏற்படும் மாற்றங்கள் சாதாரணமாக நிலுவையிலுள்ள நடைமுறைகளை பாதிக்காது - உரிமைகோருநர்கள் எவ்வாறு பின்னாளில் குறைந்தபட்ச ஊதியம் உயரக்கூடும் என எண்ண முடியாதோ அதே போன்று காப்பீட்டாளரும் சட்ட நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் போது சார்புடையவரின் இறப்பு காரணமாக எவ்வித பலனும் கோர இயலாது - சட்டத்தின் சலுகைகள் ஏதேனும் இருதரப்பினரின் வழக்கறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அது வழக்கு தரப்பினரை கட்டுப்படுத்தாது.

சட்டத்தின் சலுகை : அனுமதிக்கப்பட்ட அளவு - நிர்ணயம் : வழக்கறிஞர்கள் சட்டப்படியான உரிமைகளை தூக்கி எறிந்துவிட்டு சட்டத்திற்கு முரணாக ஏற்பாடுகள் செய்ய இயலாது - மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988.

மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988: போதிய சான்றுப்பொருள் இல்லாத நிலையில் வருமானம் கணக்கிடுதல் - முடிவு: இவ்வழக்கில் உரிமைகோருநர்கள் தரப்பில் பாதிக்கப்பட்ட நபர்-கணவரின் வருமானம் சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாமலும் அந்த நபர் ஆசிரியராக பணிபுரிந்தார் என்பது நிரூபிக்கப்படவில்லை என்றாலும் கூட அதற்காக அவரது வருமானத்தை கணக்கீடு செய்யும் போது குறைந்தபட்ச ஊதியத்தை ஏற்றுக்கொண்டுள்ளது நியாயமாகாது - சான்றுரைஞர் வாக்குமூலம், பதிவில் உள்ள சான்றாவணங்கள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மூலமாக மரணமுற்ற நபர் கூடுதலான கல்வி படிப்பும், தகுதியும் உடைய நபர் என்பது தெளிவாகிறது - இறந்த நபர் தனது பயணத்திற்கு பயன்படுத்திய மோட்டார் வாகனத்தின் மூலம் அவர் தனது குடும்பத்திற்கு ஒரு சராசரியான வாழ்க்கை தரத்தை வழங்கி வந்ததும் தெரியவருகிறது - மரணமுற்ற நபரின் குடும்பத்தின் தற்போதைய சராசரி வாழ்க்கை தரத்தை பாதுகாக்க வேண்டியது மோட்டார் வாகன இழப்பீட்டு சட்டத்தின் அடிப்படையாகும் - அதன்காரணமாக திறன்பெற்ற வேலையாளுக்கான குறைந்தபட்ச ஊதியமான ரூ.6197/- உள்ளது இவ்வழக்கில் பொருந்தும்.

மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988: எதிர்கால வாய்ப்புகள் - மரணமுற்ற நபர் சுயதொழில் செய்து வந்தாலோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெற்று வந்தாலோ அவர் 40 வயதிற்கு கீழான நபராக இருந்தால் அவரது நிரூபிக்கப்பட்ட வருமானத்தைவிட கூடுதலாக 40% வழங்கப்பட வேண்டும் - மரணமுற்ற நபர் வயது 40 முதல் 50 க்குள் இருந்தால் கூடுதலாக 25 சதவீதமும், அந்த நபரின் வயது 50 முதல் 60 க்குள் இருந்தால் கூடுதலாக 10 சதவீதமும் வழங்குவது தேவையான கணக்கீட்டு முறையாகக் கொள்ளவேண்டும் - நிரூபிக்கப்பட்ட வருமானம் என்பது வருமானத்திலிருந்து வரியை கழித்த பின்னர் உள்ள தொகை - கருத்தியலான வருமானம் உள்ள நபர்களுக்கு எதிர்கால வாய்ப்புகள் அனுமதிக்கத் தேவையில்லை என்ற வாதம் நிலையான பணவீக்கம் மற்றும் தூண்டப்பட்ட ஊதிய உயர்வை கருத்தில் கொள்ளும் போது, தகுதியற்றது சட்டப்படியும் தவறானது.

மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988: இல்லத்தரசிகளுக்கான கருத்தியலான வருமானத்தை கணக்கீடு செய்யவும் எதிர்கால வாய்ப்புகளை இழப்பீடு வழங்க கருத்தில் கொள்ள வேண்டும் - காரணிகளை தீர்மானித்தல்- விவாதிக்கப்பட்டது (நீதியரசர் மாண்புமிகு நீதியரசர் திரு .N.V.ரமணா- கூடுதலாக)

மேல்முறையீடுகள் பகுதியாக அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற தீர்மானம்

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்யகாந்த் தீர்ப்பின்படி :

1. சம்மந்தப்பட்ட நபர் இறக்கும் போது, அவருக்கு மூன்று சார்புடையவர்கள் அல்ல, நான்கு சார்புடையவர்கள் இருந்தனர் என்பது மறுக்கப்படாத பொருண்மையாகும். அதன்பின்னர் மரணமுற்ற நபரின் தாயாரின் இறப்பு மோட்டார் வாகன இழப்பீட்டை குறைப்பதற்கான காரணமாக இருக்கக்கூடாது. கேட்புரிமைகளும் சட்டப் பொறுப்புகளும் விபத்து நடந்த போதே தீர்மானமாகின்றன அதன்காரணமாக பின்னிட்டு ஏற்படும் மாற்றங்கள் சாதாரணமாக நிலுவையிலுள்ள நடவடிக்கைகளை பாதிக்காது. எவ்வாறு மேல்முறையீட்டாளரான உரிமைக்கோருநர்கள் குறைந்தபட்ச ஊதிய தொகையில் பின்னிட்டு ஏற்படும் உயர்வை தங்களுக்கு ஆதரவாக எடுத்துரைக்க இயலாதோ அதேபோன்று எதிர்மேல்முறையீட்டாளர் ஆன காப்பீட்டாளரும் சட்ட நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் போது, சார்ந்த நபர் ஒருவர் இறக்கும் போது அதனடிப்படையில் பலன் கோர இயலாது. இவ்வகையில் சட்டத்தில் ஏதேனும் சலுகைகள் இருதரப்பு வழக்கறிஞர்களால் ஏற்படுத்தப்படும் போது, அவை சட்டப்படியான உரிமைகளை வழக்கறிஞர்கள் துாக்கி எறிந்துவிட்டு சட்டத்திற்கு எதிராக ஏற்பாடுகள் செய்ய இயலாது என்ற சட்டப்படியான கோட்பாட்டின் அடிப்படையில் அந்த ஏற்பாடுகள் வழக்கு தரப்பினர்களை கட்டுப்படுத்தாது.

21 நீதிமன்றத்தால் வழங்கப்படும் எந்தவொரு இழப்பீடும் நியாயமானதாகவும், பொருளுள்ளதாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி நியாயம், சமத்துவம், நல்லமனம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும். மரணமுற்ற நபரின் குடும்பத்தில் 70 வயதிற்கும் மேலான அவரது பெற்றோர்கள் மட்டுமல்லாது 3 மற்றும் 4 வயதுள்ள சிறிய பெண்பிள்ளைகள் உள்ளனர், அதன்காரணமாக அவர்களுக்கு அதிகப்படியான கவனிப்பும் செலவும் அவர்கள் சுயசார்பு நிலையை எட்டும்வரை வழங்கப்பட வேண்டும். துரதிஷ்ட வசமாக திருமணமான தம்பதியின் 3 வது குழந்தை சிசுவாக தனது தாயாரின் வயிற்றில் இருந்த போது ஓட்டுநரின் கவனக்குறைவு காரணமாக ஏற்பட்ட விபத்தில் அக்குடும்பத்தின் 3 வது குழந்தை பாதிக்கப்பட்ட நபரின் வயிற்றில் இருந்தபோது இறந்துள்ளது. இறந்த

நபருக்கு நான்கு நபர்கள் சார்ந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதும் தெரியவரும் நிலையில், அதன்காரணமாக தம்பதியினருக்கு ஏற்படும் தனிப்பட்ட செலவினங்களுக்கான சரியான கழித்தல் என்பது 1/4 தானே தவிர தீர்ப்பாயத்தாலும், உயர்நீதிமன்றத்தாலும் முடிவு செய்யப்பட்டவாறு 1/3 அல்ல.

தொடக்கக்கல்வி இயக்குநர் எதிர் பிரமோத் குமார் சாஹு (2019) 10 எஸ்சிசி 674, ஹெலன் C ரெபல்லோ எதிர் மகாராஸ்டிரா மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் (1999) 1 எஸ்சிசி 90 – பின்பற்றப்பட்டுள்ளது.

2.2. இரண்டாவதாக உரிமைக்கோருநர்களால் பாதிக்கப்பட்டநபரின் நபரின் கணவரது வருமானம் குறித்து எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்ய இயலவில்லை , அவர் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார் என்பதும் நிரூபிக்கப்படவில்லை என்றாலும் கூட அவரது வருமானத்தை கணக்கீடு செய்யும் போது, குறைந்த ஊதியத்திற்கான குறைந்தபட்ச அடுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது நியாயமானதல்ல. சான்றுரைஞர்களின் வாக்குமூலங்கள் பதிவிலுள்ள சான்றாவணங்கள் மற்றும் விபத்தின் சந்தர்ப்பசூழ்நிலைகள் ஆகியவற்றின் மூலமாக இறந்த நபர் கூடுதலான கல்விதகுதியும் திறமையும் உள்ள நபர் என்பது தெரியவருகிறது. மேலும் அவர் விபத்தின் போது தனது பயணத்திற்கு பயன்படுத்திய மோட்டார் வாகனம் மூலம் அப்போது அவர் தனது குடும்பத்தினருக்கு சராசரியான நியாயமான வாழ்க்கை தரத்தை வழங்கி வந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. இறந்த நபரின் குடும்பத்தில் தற்போதைய வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்து உறுதிபடுத்த வேண்டியது மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். அதன்காரணமாக ஹரியானா மாநிலத்தில் ஏப்ரல்-2014 ம் ஆண்டு திறன்பெற்ற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.6197/-, குறைந்தபட்சம் இவ்வழக்கில் பின்பற்றப்பட வேண்டும்.

ஆர். கே. மாலிக் எதிர் கிரன்பால் (2019) 14 எஸ்சிசி 1 பின்பற்றப்பட்டது.

2.3. மூன்றாவதாக மற்றும் மிக முக்கியமானதாக, எதிர்கால வாய்ப்புகளை கருத்தில் கொண்டு, இழப்பீடு வழங்கக்கூடாது என்றும், பிரனாய் சேதி வழக்கில் மேற்கொள்ளப்பட்ட

மேற்குறிப்பு நிலுவையில் இருக்கும் போது அவ்வாறு இழப்பீடு வழங்கக் கூடாது என உயர்நீதிமன்றத்தில் காப்பீடுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதம் நியாயமானதல்ல. மேற்படி வாதத்தை பொறுத்து, சட்ட நிலையானது அறுதியிட்டு தெளிவாக்கப்பட்டு இறந்த நபர் சுயதொழில் செய்பவராகவோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் நபராகவோ இருந்து 40 வயதிற்கு கீழான நபராகவும் இருக்கும்பட்சத்தில், கூடுதலாக 40 சதவீதம் அவரது நிரூபிக்கப்பட்ட ஊதியத்துடன் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும், இறந்த நபர் 40 முதல் 50 வயதிற்கு உள்ளான நபராக இருந்தால் கூடுலாக 25 சதவீதமும், 50 முதல் 60 வயதிற்குள்ளான நபராக இருந்தால் 10 சதவீதமும் கொண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. நிரூபிக்கப்பட்ட வருமானம் என்பது, வருமானத்திலிருந்து வரி தொகையை கழித்தது போக உள்ள தொகையாகும்.

நேஷனல் இன்சூரன்ஸ் கோ லிமிடெட் எதிர் பிரனாய் சேதி (2017) 16 எஸ்சிசி 680 – பின்பற்றப்பட்டது

3. மரணமுற்ற இருவரும் 40 வயதிற்கு கீழான நபர்கள் என்ற நிலையிலும், அவர்கள் நிரந்தர ஊழியர்கள் என்பது நிரூபிக்கப்படாத நிலையில், எதிர்கால வாய்ப்புகளுக்காக 40% அவர்களுக்காக செலுத்தப்பட வேண்டும். கருத்தியலான வருமானம் உள்ள நபர்களுக்கு எதிர்கால வாய்ப்புகள் குறித்து கருத்தில் கொள்ள தேவையில்லை என்ற வகையில் முன்வைக்கப்பட்ட வாதங்கள் நிலையான பபணவீக்கத்தால் தூண்டப்பட்ட ஊதியஉயர்வை பொறுத்து சட்டப்படி தவறான, தகுதியற்ற வாதம் ஆகும். ஹெம்ராஜ் எதிர் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற வழக்கில் ஒரு நபரின் வருமானம் குறித்து ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் உத்தேச வேலைக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் இரண்டுக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை என முடிவு செய்யப்படுகிறது. இந்த இரண்டு சூழ்நிலைகளும் ஒரே படிநிலையில் அமைகின்றன. அதன்காரணமாக தீர்ப்பாயம் நிர்ணயித்துள்ள வருமானத்தில் கூடுதலாக 40% வருமானம் சேர்க்கப்பட வேண்டும்.

சுனிதா டோகாஸ் எதிர் நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் 2019 எஸ்சிசி இணையதளம் எஸ்சி 1045; ஹெம் ராஜ் எதிராக ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி

லிமிடெட். (2018) 15 எஸ்சிசி 654 - சார்ந்தது

மாண்புமிகு நீதியரசர் திரு. எண். விரமணா (கூடுதல் தீர்ப்புரை):

1. பிரதானமாக இருவகையான சூழ்நிலைகளின் போது பொதுவாக நீதிமன்றம் பாதிக்கப்பட்ட நபரின் கருத்தியலான வருமானத்தை நிர்ணயம் செய்கிறது. பாதிக்கப்பட்ட நபர் வேலை பார்த்து வந்த நிலையில், உரிமைக்கோருநர்களால் அவரது சரியான வருமானத்தை நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலாத நிலையில் உள்ளவர்கள் முதல் வகையைச் சார்ந்தவர்கள். அத்தகைய சூழ்நிலையில் நீதிமன்றம் கோப்பிலுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அவரது குடும்பத்தின் வாழ்க்கைத் தரம், பாதிக்கப்பட்ட நபரின் தகுதிகள், பொதுவாக அவர் பணியாற்றிய துறையில் உள்ள பொது வருமானம் மற்றும் இதர சூழ்நிலைகளைக் கோப்பிலுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட நபரின் வருமானம் கருத்தியலாக நிர்ணயம் செய்யப்படும். வருமானம் ஈட்டாத நபர் அதாவது குழந்தை, மாணவர், இல்லத்தரசி போன்றவர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்யக் கோருவது இரண்டாவது வகையைச் சார்ந்ததாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்வது மிகவும் கடினம் என்று சொல்லத்தேவையில்லை.

2. நீதிமன்றம் பெரும்பாலும் வருமானம் ஈட்டாத பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு தொகை நிர்ணயம் செய்ய வெவ்வேறு கோட்பாடுகளை பின்பற்றுகிறது. அவ்வகையில் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை அவ்வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் நியாயமானதாக இருக்க வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படுவதில் கருத்தியலான வருமானமும் அடங்கும். வருமானம் ஈட்டாத பாதிக்கப்பட்ட நபர்களில் நீதிமன்றங்கள் பெரும்பாலும் இல்லத்தரசிகளைப் பொறுத்து இழப்பீட்டு தொகை நிர்ணயம் செய்யவேண்டியுள்ளது. ஒரு இல்லத்தரசி முழு குடும்பத்திற்கும் உணவு தயாரித்தல், மளிகை பொருட்கள் மற்றும் பிற வீட்டு தேவைக்கான பொருட்களை வாங்குதலை நிர்வகித்தல் வீடு மற்றும் சுற்றுவட்டார பகுதியை சுத்தம் செய்து நிர்வகித்தல், அலங்காரம், பழுதுபாரப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல், குழந்தைகள் மற்றும் வீட்டிலுள்ள வயதான உறுப்பினர்களின் தேவைகளை கவனித்தல் வரவு செலவீனங்களை கவனித்தல் போன்ற பல

பணிகளை செய்கிறார். மேலும் கிராமப்புற வீடுகளில் வயலில் விதைத்தல், அறுவடை செய்தல், நடவு செய்தல், கால்நடைகளை மேய்த்தல் போன்ற பணிகளையும் செய்கிறார்கள். மேற்கண்டவாறு பல்வேறு வேலைகளை இல்லத்தரசிகள் செய்த பின்னரும் அவர்கள் வேலை செய்வதில்லை என்றும், அவர்கள் குடும்பத்திற்கு வருமானம் ஈட்டுவதில்லை என்று கருதப்படும் எண்ணமானது பல ஆண்டுகளாக உள்ள பிரச்சனைக்குரிய எண்ணம் ஆகும். அந்த எண்ணம் மாற்றப்பட வேண்டும்.

3. இந்த பிரச்சனையை சுற்றி வளர்ந்து வரும் விழிப்புணர்வை கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு பொது பரிந்துரை எண் 17 ன்படி 1991 ம் ஆண்டு "பெண்களின் ஊதியம் ஈட்டாத செயல்களின் அளவீடுகள் நிர்ணயம் செய்தல் மற்றும் அவ்வகையில் மொத்த தேசிய உற்பத்தியில் அவர்களின் பங்கு" பொது பரிந்துரை என்பதை ஏற்றது. இந்தப் பொது பரிந்துரை "ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்கும் பங்களிக்கும் பெண்களின் ஊதியம் ஈட்டாத செயல்களின் அளவீடு மற்றும் நிர்ணயம் செய்தல் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கை சட்டபூர்வமாக புலப்படச்செய்கிறது" என்பதை உறுதிப்படுத்தியது. பெண்களுக்கெதிரான எல்லாவகையான பாகுபாடுகளையும் அகற்றும் மாநாட்டின் வகுமுறைகூறு 11 முன்னேற்றமே இந்த பொதுப் பரிந்துரைன் ஆகும். இது இந்தியா ஒப்புதலளித்த பணிக்களத்தில் பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை அகற்றுதல் என்ற ஒரு மாநாட்டுடன் தொடர்புடையதாகும்.

4.அதன்காரணமாக இல்லத்தரசி ஒருவரின் கருத்தியலான வருமானத்தை நிர்ணயம் செய்வதற்கு முன்பாக அவர் செய்யும் முக்கியமான பணிகள் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அது பல பெண்கள் தாமாக விருப்பப்பட்டோ அல்லது சமுதாய, கலாச்சார காரணங்களினாலோ இல்லத்தரசிகளாக இருந்து பணிகள் செய்து வருவதற்கு வழங்கப்படும் அங்கீகாரம் ஆகும். இல்லத்தரசிகள் உழைப்பு, சேவைகள் மற்றும் தியாகங்களின் மதிப்பை நாட்டின் சட்டங்களும் நீதிமன்றங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன என்ற முக்கியமான கருத்தைச் சமூகத்திற்கு சமிக்ஞை செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கைகள், பாராம்பரியமாக பொருளாதாரப் பகுப்பாய்வுகளில் சேர்க்கப்படாமல் இருந்திருந்தாலும்கூட, தற்போது இல்லத்தரசிகளின் பணி குடும்பத்தின் பொருளாதார நிலைக்கும் தேசத்தின் பொருளாதாரத்திற்கும் பங்களிக்கின்றனர் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளச் செய்கிறது. இது

மாறி வரும் அணுகுமுறைகள் மற்றும் மனநிலையின் பிரதிபலிப்பாகவும் சர்வதேச சட்ட கடமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதையும் காட்டுகிறது. மேலும் மிக முக்கியமாக இது அரசமைப்பு பார்வையில், சமூக சமத்துவம் மற்றும் அனைத்து தனிநபர்களுக்கும் வாழ்வின் கண்ணியத்தை உறுதி செய்வதற்கான முக்கியமான படியாகும். இல்லத்தரசி ஒருவரின் கருத்தியலான வருமானம் எவ்வாறு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கேள்விக்கு திரும்பும்போது, அதற்கு நிலையான ஒரு அணுகுமுறை இருக்கமுடியாது. அத்தகைய வழக்குகளில் கருத்தியலான வருமானமானது இல்லத்தரசி செய்யும் அனைத்து வேலைகளையும் கருத்தில் கொண்டு உத்தேசமாக நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் இழப்பீட்டுத் தொகையானது வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதை நீதிமன்றங்கள் உறுதி செய்ய வேண்டும்.

ஆர்.கே. மாலிக் எதிர் கிரண் பால்(2009) 14 எஸ்சிசி 1;

திரு.எம்.ஆர்.கிருஷ்ண மூர்த்தி எதிர் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கோ. லிமிடெட் 2019 எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 315; லதா வாத்வா எதிர் பீகார் மாநிலம்(2001) 8 எஸ்சிசி 197 : [2001] 1 சப்லி எஸ்சிஆர் 578; அருண் குமார் அகர்வால் எதிர் நேஷனல் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் (2010) 9 எஸ்சிசி 218 : [2010] 9 எஸ்சிஆர் 303; ராஜேந்திர சிங் எதிர் நேஷனல் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் 2020 எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 521; நேஷனல் இன்சூரன்ஸ் லிமிடெட் எதிர் மைனர் தீபிகா காப்பாளர் மற்றும் அடுத்த சிநேகிதர் ரங்கநாதன் 2009 எஸ்சிசி ஆன்லைன் மேட் 828; காஜல் எதிர் ஜகதீஷ் சந்த்(2020) 4 எஸ்சிசி 413; பொது மேலாளர், கேரள மாநில சாலை போக்குவரத்து கழகம், திருவனந்தபுரம் எதிர் சுசம்மா தாமஸ்(திருமதி) (1994) 2 எஸ்சிசி 176; சரளா தீட்சித் எதிர் பல்வந்த் யாதவ்(1996) 3 எஸ்சிசி 179 : [1996] 3 எஸ்சிஆர் 30; சர்ளா வர்மா (திருமதி) எதிர் டெல்லி போக்குவரத்து கழகம் (2009) 6 எஸ்சிசி 121: [2009] 5 எஸ்சிஆர் 1098 – பின்பற்றப்பட்டுள்ளது.

5.எதிர்கால வாய்ப்புகளை பொறுத்து இழப்பீடு வழங்குவதன் பின்னணியில் உள்ளக் காரணங்கள் இனி மேற்கொண்டு அவர் பணிபுரியும் தொழில் வகையைச் சார்ந்ததோ அல்லது

அது நிரந்தரமானதா இல்லையா என்பதை பொறுத்தானதும் இல்லை. அதே நேரத்தில் இழப்பீட்டு தொகையின் சதவீதமானது மேற்படி காரணிகளைச் சார்ந்தே உள்ளது. எதிர்கால பலன்களை பொறுத்து நியாயமான இழப்பீட்டுத் தொகை, வாழ்க்கையின் உண்மை நிலை, குறிப்பாக பணவீக்கம், தனி நபர்கள் மற்றும் தங்கள் அன்புற்குரியவர்களின் சூழ்நிலைகளை மேம்படுத்துதல், உயரும் ஊதிய விகிதங்கள், பணியின் தரத்தில் உள்ள அனுபவத்தின் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், இழப்பீட்டு தொகை நியாயமானதாக உள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டியக் கடமை நீதிமன்றங்களைச் சார்ந்தது.

நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரனாய் சேதி (2017) 16 எஸ்சிசி 680: 2017 13 எஸ்சிஆர் 100- பின்பற்றப்பட்டது.

6. மேற்கூறிய அறிவாராய்ச்சிக் கோட்பாட்டை கருத்தில் கொள்ளும் போது, பாதிக்கபட்ட நபர்கள் பணியில் இருந்தது நிரூபிக்கப்பட்டிருக்கிறது ஆனால் உரிமைகோருநர்களால் வருமானத்தை நீதிமன்றத்தின் முன் நிரூபிக்க இயலவில்லை என்னும் முதல் வகையில் நீதிமன்றத்தால் கருத்தியலான வருமானம் கணக்கிடப்படும் சூழல் தெளிவாக உள்ளது. பாதிக்கப்பட்ட நபர் ஏதோ ஒருத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார் என்பது நிரூபிக்கட்டிருக்கிறது என்பதன் தொடர் முடிபு அவருக்கு வருமானம் உண்டு என்பதாகும். அவர்களுடைய வருமானம் நிரூபிக்கப்படவில்லை என்பதன் அடிப்படையில், குறிப்பாக நீதிமன்றத்தால் கருத்தியலான வருமானம் கணக்கிடப்பட்டிருக்கும்போது, அவர்களுக்கு எதிர்காலப் பலன்களை வழங்குவது, நியாயமானதாகாது என்பது தெளிவாகிறது. இரண்டாவது வகை வழக்குகள் அதாவது ஊதியம் ஈட்டாத பாதிக்கப்பட்ட நபர்களுக்கான கருத்தியலான வருமானத்தைப் பொறுத்து குறிப்பாக இல்லத்தரசிகளை பொறுத்து, கருத்தியலான வருமானம் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் பணவீக்கத்தின் விளைவுகள் சமமாக பொருந்தும். திறமையில் அனுபவத்தின் காரணமாக ஏற்படும் மேன்மைகள், குடும்பத்தில் வேலை செய்யும் களத்தில் ஏற்படாது என மேற்கொண்டு எவரும் கூறக்கூடாது.

ஹேம் ராஜ் எதிர் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்(2018) 15 எஸ்சிசி 654; சுனிதா டோகாஸ் எதிர் நியூ இந்தியா இன்சூரன்ஸ் லிமிடெட் (2019) 20 எஸ்சிஆர் 688 – பின்பற்றப்பட்டது.

-

முன்தீர்ப்பு மேற்குறிப்புகள்

மாண்புமிகு நீதியரசர் திரு.சூர்ய காந்த் தீர்ப்புரை

(2019) 10 எஸ்சிசி 674	பின்பற்றப்பட்டது	பத்தி 10
(1999) 1 எஸ்சிசி 90	பின்பற்றப்பட்டது	பத்தி 11
(2009) 14 எஸ்சிசி 1	பின்பற்றப்பட்டது	பத்தி 12
(2017) 16 எஸ்சிசி 680	பின்பற்றப்பட்டது	பத்தி 13
(2018) 15 எஸ்சிசி 65	பின்பற்றப்பட்டது	பத்தி 14

மாண்புமிகு நீதியரசர் திரு.எண். வி.ரமணா தீர்ப்புரை

(2001) 8 எஸ்சிசி 197	பின்பற்றப்பட்டது	பத்தி 5
(2010) 9 எஸ்சிசி 218	பின்பற்றப்பட்டது	பத்தி 6
(2019) 6 எஸ்சிஆர் 402	பின்பற்றப்பட்டது	பத்தி 16
(2017) 16 எஸ்சிசி 680	பின்பற்றப்பட்டது	பத்தி 20
(2020) 4 எஸ்சிசி 413	பின்பற்றப்பட்டது	பத்தி 20
(1994) 2 எஸ்சிசி 176	பின்பற்றப்பட்டது	பத்தி 20
(1996) 3 எஸ்சிசி 179	பின்பற்றப்பட்டது	பத்தி 20
(2009) 6 எஸ்சிசி 121	பின்பற்றப்பட்டது	பத்தி 21
(2018) 15 எஸ்சிசி 654	பின்பற்றப்பட்டது	பத்தி 25
(2019) 20 எஸ்சிசி 688	பின்பற்றப்பட்டது	பத்தி 25

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு:

உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 19-20/2021

மோட்டார் வாகன விபத்துகள் கேட்புரிமை தீர்ப்பாயம் விண்ணப்ப எண்கள் 336/2017 மற்றும் 375/2017 ஆகியவற்றில் புதுடெல்லியிலுள்ள டெல்லி உயர்நீதிமன்றத்தால் 17.07.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மீதான மேல்முறையீடு.

வழக்கறிஞர்கள் திரு.மிருதுன்ஜே குமார் சின்ஹா, எஸ்.என்.பராசர், ரஞ்சன் குமார் பாண்டே, கே.கே.பட் வழக்கு தரப்பினர்களுக்காக ஆஜராகினர்.

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு.சூர்யகாந்த் அவர்களால் பகரப்பட்டத் தீர்ப்புரை

அனுமதி வழங்கப்பட்டது.

2.இந்த உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகள் விபத்தில் காலம் சென்ற இரு நபர்களைச் சார்ந்த மூன்று நபர்கள், (அதாவது இரண்டு இளவர் மகள்கள், மற்றும் தந்தை) ஆகியோரால் 17.07.2017 தேதியிட்டு டெல்லி உயர்நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்துகள் கேட்புரிமை தீர்ப்பாயம், ரோகிணி [இனிமேற்கொண்டு, "தீர்ப்பாயம்"] மோட்டார் வாகனவிபத்து இழப்பீட்டு தொகையாக ரூ.40,71,000/- என 24.12.2016 அன்று மோட்டார் வாகனச் சட்டம், 1988 சட்டப்பிரிவு 168 ன் கீழ் நிர்ணயம் செய்ததை டெல்லி உயர்நீதிமன்றம் 22 லட்சம் என குறைத்து அளித்துள்ளத் தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காணொளி வாயிலாக விசாரிக்கப்பட்டுள்ளன.

வழக்கின் பொருண்மைகள்:

3. இறந்த தம்பதிகளான வினோத் மற்றும் பூனம் ஆகியோர்கள் 12.04.2014 அன்று காலை

7:00 மணியளவில் டெல்லியில் மோட்டார் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, ஒரு சந்திப்பில் 'DL 7 CA 1053' என்ற பதிவெண் கொண்ட சான்ட்ரோ கார் மோதியது. அதன்காரணமாக இருவரையும் செயலிழக்கச் செய்து இருவரும் விபத்தினால் ஏற்பட்ட மண்டையோட்டு பெருமூளைச்சிரை பாதிப்பு, ரத்த கசிவு மற்றும் அதிர்ச்சி காரணமாக இறந்துவிட்டனர்.

4.விபத்து ஏற்படுத்திய ஓட்டுனர் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304 ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு தனி நபர் கண்ணுற்ற சாட்சியான காவலர் விஷ்ணு டட் என்பவரின் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது. கண்ணுற்ற சாட்சியின் வாக்குமூலத்தின் மூலமாக கார் ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டதாக தெரிய வந்துள்ளது. பின்னிட்டு மோட்டார் வாகனங்கள் சட்டம், சட்டப்பிரிவு 166 ன் கீழ் கேட்புரிமை மனு இருசிறு குழந்தைகள் மற்றும் 70 வயதிற்கு மேலான பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்டது. வாகனத்தின் ஓட்டுனர் மற்றும் உரிமையாளர் தரப்பில் இறந்தவர்கள் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டிச் சென்றதால் அவர்களின் கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டதாக வாதம் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் /உரிமைகோருநர்கள் தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் எவரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் வழக்கை சமாதானமாக முடித்துக் கொள்ள இழப்பீடாக பூனம் என்பவரின் இறப்பிற்கு ரூபாய் ஆறு லட்சத்து நாற்பதாயிரமும், வினோத் என்பவர் இறப்பிற்கு ரூபாய் பத்து லட்சத்து எழுபத்தொன்றாயிரமும் செலுத்த முன்வந்தனர்.

5. தீர்ப்பாயம் ஓட்டுநருக்கு எதிராகக் குற்றவியல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையையும், அந்த நபர் சாட்சிக்கூண்டில் ஏறி சாட்சியம் அளிக்க முன்வராததையும் கருத்தில் கொண்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்த தனிநபர் கண்ணுற்ற சாட்சியின் வலுவான சாட்சியத்தின் அடிப்படையில், கார் ஓட்டுநர் அதிவேகமாக வாகனத்தை ஓட்டியதன் காரணமாக தான் விபத்து ஏற்பட்டது என்றும், அதன்காரணமாக எதிர்மேல்முறையீட்டாளரான காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகை செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என முடிவு செய்துள்ளது. இழப்பீட்டுத் தொகை எவ்வளவு வழங்கப்பட

வேண்டும் என்பது குறித்து தீர்ப்பாயம் ஆராயும் போது, முதலில் பூனம் மற்றும் வினோத் ஆகியோர்கள் வயது முறையே 26 மற்றும் 29 என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்விளைவாக வயது அடிப்படையிலான பெருக்கல் குறியீடு 17 ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இறந்த நபரின் தந்தை, வினோத் இறக்கும் போது மாதம் தலா ரூ.14000/- டெல்லியிலுள்ள பிரதாப் பொது பள்ளியில் ஆசிரியராக பணி புரிந்ததன் மூலம் வருமானம் ஈட்டி வந்ததாக வாதிட்டாலும் கூட, அதனை நிரூபிக்க அவரால் சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்ய இயலவில்லை. அதன்காரணமாக சார்புடையவர்களின் இழப்புக் குறித்து நிர்ணயம் செய்ய டெல்லியில் உள்ள குறைந்தபட்ச ஊதியமானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இறந்து போன பூனம் என்பவரது எதிர்கால பலன்களைப் பொறுத்து கூடுதலாக 25% வருமானமும் கூட்டப்பட்டது மற்றும் வினோத்தின் மாத வருமானத்தில் அவரது தனிப்பட்ட செலவுகளுக்காக 1/3 தொகை கழிக்கப்பட்டது. இறந்த ஒவ்வொரு நபரின் அன்பு மற்றும் பாச இழப்பு, நலன், ஈமச்சடங்கு செலவுகளுக்காக தலா ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் வழங்கப்பட்டுள்ளது. ஆகமொத்தம் தீர்ப்பாயம் இருவரின் இறப்பிற்கும் உரிமைகோருநர்களுக்கு மொத்த இழப்பீடாக ரூபாய் நாற்பது லட்சத்து எழுத்தொன்றாயிரம் வழங்கியுள்ளது.

6. எதிர்மேல்முறையீட்டாளரான காப்பீட்டு நிறுவனத்தின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் இறந்த நபர்கள் டெல்லியில் வேலைப் பார்த்து வந்தார்கள் என்று எந்த ஆதாரமும் இல்லாதபோது டெல்லி அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை கருத்தில் கொண்டு, தீர்ப்பாயம் இழப்பீடு நிர்ணயம் செய்திருப்பது தவறு என்ற அடிப்படையில், மேல்முறையீடுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் இறந்தவர்களின் நிரூபிக்கப்பட்ட குடியிருப்பு ஹரியானா மாநிலத்தில் உள்ள காரணத்தினால், அந்த மாநிலத்தால் நிர்ணயிக்கப்பட்டக் குறைந்த பட்ச ஊதிய தொகை தான், சார்புடையவர்களின் இழப்பீடுத் தொகை கணக்கீடு செய்ய பின்பற்றி இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இறந்த போன பூனம் என்பவரை பொறுத்து, அவரது எதிர்கால வாய்ப்புகள் குறித்து கூடுதல் தொகைத் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அவரதுத் தனிப்பட்டச் செலவுகளுக்கான தொகை குறைக்கப்படவில்லை என்றும் வேண்டுரைக்கப்பட்டது. மேலும் தற்கவனமின்மை அடிப்படையிலும் இழப்பீடு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும், நிரந்தரமற்ற பணியாளர்களை பொறுத்து எதிர்கால

வாய்ப்புகளை பொறுத்து மாறுபட்ட சட்டநிலைகள் உள்ள காரணத்தினால் எதிர்கால பலன்களை பொறுத்து கூடுதல் தொகை எதுவும் உரிமைகோருநர்களுக்கு வழங்கப்படக்கூடாது என வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. உயர்நீதிமன்றம் மேற்படி வாதங்களை ஏற்றுக்கொண்டு இறந்த போன இரு நபர்களும் ஹரியானா மாநிலத்தில் வசித்தத் திறமையற்றத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில், குறைந்தபட்ச ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டுக் கருத்தியலான வருமானத்தைக் குறைவாக கணக்கீடு செய்துள்ளது. அதுபோல் பூனம் என்பவரது வருமானத்தில் 1/3 தொகை அவரது தனிப்பட்ட செலவுகளுக்கானது கழிக்கப்பட்டும் இறந்து போன இருவருக்கும் எதிர்கால பலன்கள், வாய்ப்புகளுக்கான இழப்பீடுத் தொகை மறுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மொத்த சூழ்நிலைகள் மற்றும் பூனம் தனது குடும்பத்திற்கான பங்களிப்பை கருத்தில் கொண்டு, நன்கொடையான 25 சதவீத கூடுதல் வருமானம் அவரது ஊதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்காரணமாக உயர்நீதிமன்றம் உரிமைகோருநர்களுக்கு வழங்கவேண்டிய மொத்த இழப்பீட்டு தொகையை 22 லட்சமாக குறைத்துள்ளது.

<u>தரப்பினர்களின் வாதங்கள்</u>:

8. உரிமைகோருநர்களின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், இழப்பீட்டு தொகை மேற்கண்டவாறு குறைக்கப்பட்டது தவறு என்றும், சார்பு இழப்பு குறித்து நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரனாய் சேதி[1] என்ற வழக்கில் அரசமர்வு அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் மீண்டும் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனவும், நிரந்தரம் அல்லாத பணியாளர்கள் குறித்து எதிர்கால வாய்ப்புகள், பலன்கள் குறித்த சட்டநிலை மேற்படி வழக்கில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது, இறந்து போன வினோத் மற்றும் பூனம் ஆகிய இருவரது நிர்ணயிக்கப்பட்ட பெருந்தன்மையான கூடுதல் வருமானங்களுக்கு இடையே ஒழுங்கின்மை உள்ளது என்றும், வினோத் திறமையற்ற தொழிலாளி என்ற முறையில் அவரது குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

---

1 (2017) 16 எஸ்சிசி 680

9. மறுபுறம் எதிர்மேல்முறையீட்டாளரான காப்பீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிர்கால வாய்ப்புகள் உட்பட எந்த அடிப்படையிலும் இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்படுவது தடுக்கப்பட வேண்டும் என வாதிட்டுள்ளார். மேலும் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டத் தீர்ப்பு இருதரப்பு ஒப்புதலின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட ஆணை என்றும், அதாவது மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சார்பு இழப்பு தலைப்பின் கீழ் குறைவாக கணக்கீடு செய்ய ஒத்துக் கொண்டதாகவும் அதன்காரணமாக தற்போது அந்த கணக்கீடு இந்நீதிமன்றத்தில் எதிர்க்க இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

பகுப்பாய்வு :

I. தனிப்பட்ட செலவினங்களுக்கான கழித்தல் :

10. எதிரளரின் சமர்ப்பிப்புகளை நாங்கள் கவனமுடன் பரிசீலித்தோம். சம்மந்தப்பட்ட நபர் இறக்கும் போது, அவருக்கு நான்கு சார்புடையவர்கள் இருந்தனர் என்றும், சார்புடையவர்கள் மூன்று நபர்கள் அல்ல என்பதும் மறுக்கப்படாத பொருண்மைகளாகும். அதன்பின்னர் மரணமுற்ற நபரின் தாயாரின் இறப்பு மோட்டார் வாகன இழப்பீட்டை குறைப்பதற்கான காரணமாக இருக்கக்கூடாது. கேட்புரிமைகளும் சட்டப் பொறுப்புகளும் விபத்து நடந்த போதே தீர்மானமாகின்றன அதன்காரணமாக பின்னிட்டு ஏற்படும் மாற்றங்கள் சாதாரணமாக நிலுவையிலுள்ள நடவடிக்கைகளை பாதிக்காது. எவ்வாறு மேல்முறையீட்டாளரான உரிமைகோருநர்கள் குறைந்தபட்ச ஊதிய தொகையில் பின்னிட்டு ஏற்படும் உயர்வை தங்களுக்கு ஆதரவாக எடுத்துரைக்க இயலாதோ அதேபோன்று எதிர்மேல்முறையீட்டாளர் ஆன காப்பீட்டாளரும், சார்ந்த நபர் ஒருவர் சட்ட நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் போது, இறக்கும் போது அதனடிப்படையில் பலன் கோர இயலாது. இவ்வகையில் சட்டத்தில் ஏதேனும் சலுகைகள் இருதரப்பு வழக்கறிஞர்களால் ஏற்படுத்தப்படும் போது, அவை சட்டப்படியான உரிமைகளை வழக்கறிஞர்கள் துாக்கி எறிந்துவிட்டு சட்டத்திற்கு எதிராக ஏற்பாடுகள் செய்ய இயலாது என்ற சட்டப்படியான கோட்பாட்டின் அடிப்படையில், அந்த

ஏற்பாடுகள் வழக்கு தரப்பினர்களை கட்டுப்படுத்தாது.[2]

11. நீதிமன்றத்தால் வழங்கப்படும் எந்தவொரு இழப்பீடும் நியாயமானதாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி நியாயம், சமத்துவம், நல்லமனம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும்.[3] மரணமுற்ற நபரின் குடும்பத்தில் 70 வயதிற்கும் மேலான அவரது பெற்றோர்கள் மட்டுமல்லாது முறையே 3 மற்றும் 4 வயதான சிறுகுழந்தைகள் உள்ளனர், அதன்காரணமாக அவர்களுக்கு தனித்துவமான கவனிப்பும் செலவும் அவர்கள் சுயசார்பு நிலையை எட்டும்வரை வழங்கப்பட வேண்டும். துரதிஷ்ட வசமாக திருமணமான தம்பதியுடன், பூனமின் வயிற்றில் சிசுவாக இருந்த குடும்பத்தின் 3 வது குழந்தை ஓட்டுநரின் கவனக்குறைவு காரணமாக ஏற்பட்ட விபத்தில் இறந்துள்ளது. இறந்த நபருக்கு நான்கு நபர்கள் சார்ந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதும் தெரியவரும் நிலையில், அதன்காரணமாக தம்பதியினருக்கு ஏற்படும் தனிப்பட்ட வாழ்க்கைச் செலவினங்களுக்கான சரியான கழித்தல் என்பது 1/4 தானே தவிர தீர்ப்பாயத்தாலும், உயர்நீதிமன்றத்தாலும் முடிவு செய்யப்பட்டவாறு 1/3 அல்ல.

II. <u>மாத வருமான மதிப்பீடு</u>:

12. இரண்டாவதாக உரிமைகோருநர்களால் மரணமுற்ற நபரின் வருமானம் குறித்து எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்ய இயலவில்லை எனவும், அவர் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார் என்பதும் நிரூபிக்கபபடவில்லை என்றாலும்கூட, அவரது வருமானத்தை கணக்கீடு செய்யும் போது, குறைந்த ஊதியத்திற்கான குறைந்தபட்ச அடுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது நியாயமானதல்ல. சாட்சிகளின் வாக்குமூலங்கள், பதிவிலுள்ள சான்றாவணங்கள் மற்றும் விபத்தின் சந்தர்ப்பசூழ்நிலைகள் ஆகியவற்றின் மூலமாக வினோத் கூடுதலான கல்விதகுதியும் திறமையும் உள்ள நபர் என்பது தெரியவருகிறது. மேலும் அவர் விபத்தின் போது தனது பயணத்திற்கு பயன்படுத்திய மோட்டார் வாகனத்தின் மூலமாக அப்போது அவர் தனது குடும்பத்தினருக்கு சராசரியான நியாயமான வாழ்க்கைத் தரத்தை வழங்கி வந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. இறந்த நபரின் குடும்பத்தில்

---

2 இயக்குநர், ஆரம்பநிலை கல்வி எதிர் பிரமோட் குமார் சாகு, (2019) 10 எஸ்சிசி 674

3 ஹெலன் சி ரெபல்லோ எதிர் மகாராஸ்டிரா மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் (1999) 1 எஸ்சிசி 90

தற்போதைய வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்து உறுதிபடுத்த வேண்டியது மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். [4] அதன்காரணமாக ஹரியானா மாநிலத்தில் ஏப்ரல்-2014 ம் ஆண்டு திறன்பெற்றத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.6197/-, இவ்வழக்கில் பின்பற்றப்பட வேண்டும்.

III.**<u>எதிர்கால வாய்ப்புகள்/பலன்கள் சேர்த்தல்:</u>**

13. மூன்றாவதாக மற்றும் மிக முக்கியமானதாக, எதிர்கால வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, இழப்பீடு வழங்கக்கூடாது என்றும், பிரனாய் சேதி வழக்கில் மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பு நிலுவையில் இருக்கும் போது, அவ்வாறு இழப்பீடு வழங்கக் கூடாது என உயர்நீதிமன்றத்தில் காப்பீடுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதம் நியாயமானதல்ல. மேற்படி பிரனாய் சேதி வழக்கில் சட்ட நிலையானது அரசமர்வால் ஒருங்கிணைக்கப்பட்டு கீழ்கண்டவாறு அறுதியிட்டு தெளிவாக்கப்பட்டுள்ளது.[5]

"59.4 இறந்த நபர் சுயதொழில் செய்பவராகவோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் நபராகவோ இருந்து 40 வயதிற்கு கீழான நபராகவும் இருக்கும்பட்சத்தில், கூடுதலாக 40% அவரது நிரூபிக்கப்பட்ட ஊதியத்துடன் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும், இறந்த நபர் 40 முதல் 50 வயதிற்கு உள்ளான நபராக இருந்தால் கூடுலாக 25 சதவீதமும், 50 முதல் 60 வயதிற்குள்ளான நபராக இருந்தால் 10 சதவீதமும் கொண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. நிரூபிக்கப்பட்ட வருமானம் என்பது, வருமானத்திலிருந்து வரி தொகையை கழித்தது போக உள்ள தொகையாகும்."

[முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது]

14.மரணமுற்ற இருவரும் 40 வயதிற்கு கீழான நபர்கள் என்ற நிலையிலும், அவர்கள் நிரந்தர ஊழியர்கள் என்பது நிரூபிக்கப்படாத நிலையில், எதிர்கால வாய்ப்புகளுக்காக 40% அவர்களுக்காக செலுத்தப்பட வேண்டும். கருத்தியலான வருமானம் உள்ள நபர்களுக்கு எதிர்கால வாய்ப்புகள் குறித்து கருத்தில் கொள்ள தேவையில்லை என்ற வகையில் முன்வைக்கப்பட்ட வாதங்கள், நிலையான பணவீக்கம் மற்றும் தூண்டப்படும் ஊதிய

---

4 ஆர்.கே.மாலிக் எதிர் கிரண் பால்(2009) 14 எஸ்சிசி 1

5 நேஷனல் இன்சூரன்ஸ் கோ லிமிடெட் எதிர் பிரனாய் சேதி (2017) 16 எஸ்சிசி 680

உயர்வை கருத்தில் கொண்டு சட்டப்படி தவறான [6] தகுதிற்ற வாதம் ஆகும். **ஹெம்ராஜ் எதிர் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** [7] என்ற வழக்கில் எதிர்கால பலன்கள் இவ்வழக்கில் உள்ளதைப் போன்ற சூழ்நிலையில் வழங்கப்படக்கூடாது என்ற வாதம் தவறு என்ற வகையில் கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

"7.ஒரு நபரின் வருமானம் குறித்து ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் உத்தேச வேலைக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் இரண்டுக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை என முடிவு செய்யப்படுகிறது. இந்த இரண்டு சூழ்நிலைகளும் ஒரே படிநிலையில் அமைகின்றன. அதன்காரணமாக தீர்ப்பாயம் நிர்ணயித்துள்ள வருமானத்தில் கூடுதலாக 40% வருமானம் சேர்க்கப்பட வேண்டும். "

[முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது]

IV.பிற தலைப்புகள் மற்றும் இழப்பீடு பிரிவு:

15. இறுதியாக ஈமச்சடங்கு செலவுகள், நலன் இழப்பு, அன்பு மற்றும் பாச இழப்பு ஆகிய தலைப்புகளை பொறுத்து வாதங்கள் எதுவும் இல்லாத காரணத்தினால் அவற்றைப் பொறுத்தான தொகைகளில் மாற்றம் செய்ய எந்த காரணமும் இல்லை. அதுபோல் உயர்நீதிமன்றத்தால் வயது பெருக்கல் குறியீட்டு எண் 17 பின்பற்றப்பட்டது, 9% வட்டி வழங்கப்பட்டது, பூனம் என்பவரின் கருத்தியலான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ள நிலை, மொத்த இழப்பீட்டு தொகை 1:2:2 என்ற விகிதத்தில் தாத்தா மற்றும் இரு பெண் குழந்தைகளுக்கு மத்தியில் பிரிக்கப்பட்டுள்ள நிலை ஆகியவற்றில் குறை எதுவும் இருப்பதாக எங்களால் கருதப்படவில்லை. ஒரு தயாரான குறிப்பிற்காக பொறுத்தமான அதிகரிப்புகளுக்கு பிறகு திருத்தப்பட்ட இழப்பீட்டின் ஒப்பீட்டு அட்டவணை பின்வருமாறு இருக்கும்.

---

6 சுனிதா டோகாஸ் எதிர் நியூ இந்தியா இன்சூரன்ஸ் கோ லிமிடெட், 2019 எஸ்சிசி இணையதளம் எஸ்சி 1045

7 (2018) 15 எஸ்சிசி 654

		தீர்ப்பாயம்		உயர் நீதிமன்றம்		உச்ச நீதிமன்றம்	
	தலைப்பு	வினோத்	பூனம்	வினோத்	பூனம்	வினோத்	பூனம்
அ	மாத வருமானம்	8554	9438	5547.1	5547.1	6197.1	5547.1
ஆ	தனிப்பட்ட செலவினங்களுக்கான குறைப்பு	33%	ஒன்றும் இல்லை	33%	33%	25%	25%
இ	வயது பெருக்கல் குறியீடு	17	17	17	17	17	17
ஈ	பிற்கால வாய்ப்புகள் சரிசெய்தல்	ஒன்றும் இல்லை	25%	ஒன்றும் இல்லை	ஒன்றும் இல்லை	40%	40%
உ	சிறப்பு சூழ்நிலைகளுக்கான அதிகரிப்பு	ஒன்றும் இல்லை	ஒன்றும் இல்லை	ஒன்றும் இல்லை	25%	ஒன்றும் இல்லை	25%
ஊ	ஈமச்சடங்கு செலவுகள் மற்றும் நலன் இழப்பு	250000	250000	250000	250000	250000	250000
எ	இறந்த ஒரு நபருக்கான மொத்த இழப்பீட்டு தொகை	1413344	2656690	1004406	1193007	1577419	1735236
ஏ	முழுமையாக்கப்பட்ட தொகை	1414000	2657000	1005000	1195000	1580000	1740000
ஐ	மொத்த இழப்பீட்டு தொகை	4071000		2200000		3320000	

முடிவுரை :

16. மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக இம்மேல்முறையீடுகள் பகுதியாக அனுமதிக்கப்படுகின்றன. மோட்டார் வாகன இழப்பீட்டு தொகையாக உயர்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட மொத்தம் ரூபாய் இருபத்து இரண்டு லட்சம், உரிமைகோருநர்களான மேல்முறையீட்டாளர்களுக்கு ரூபாய் பதினொறு லட்சத்து இருபதாயிரம் கூடுதலாக வழங்கப்பட்டு மொத்தம் ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து இருபதாயிரம் ரூபாய் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது. கூட்டப்பட்ட இழப்பீட்டு தொகை இரண்டு மாதங்களுக்குள் விரிவான விபத்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட 23.05.2014 முதல் ஆண்டுக்கு 9% வட்டியுடன் சேர்த்து தீர்ப்பாயத்தால் குறிப்பிட்டுள்ளபடி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. எண்.வி.ரமணாஅவர்களால் வழங்கப்பட்டத் தீர்ப்புரை

1. கற்றறிந்த சகோதரர் மாண்புமிகு நீதியரசர் திரு.சூர்யகாந்த் தயார் செய்த தீர்ப்புரையை உற்றுநோக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றது. அவருடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். இருப்பினும் அவரது தீர்ப்புரையின் காரணங்களுடன் கூடுதலாக ஒரு இல்லத்தரசியின் கருத்தியலான வருமானம் குறித்தும் எதிர்கால வாய்ப்புகள் வருமா இல்லையா என்பது குறித்தும் கூடுதலான விவரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என நான் கருதுகிறேன்.

2.பிரதானமாக இருவகையான சூழ்நிலைகளின் போது, பொதுவாக நீதிமன்றம் பாதிக்கப்பட்ட நபரின் கருத்தியலான வருமானத்தை நிர்ணயம் செய்கிறது. பாதிக்கப்பட்ட நபர் வேலை பார்த்து வந்த நிலையில், உரிமைகோருநர்களால் அவரது சரியான வருமானத்தை நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலாத நிலையில் உள்ளவர்கள் முதல் வகையை சார்ந்தவர்கள். அத்தகைய சூழ்நிலையில் நீதிமன்றம் கோப்பிலுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அவரது குடும்பத்தின் வாழ்க்கைத் தரம், பாதிக்கப்பட்ட நபரின் தகுதிகள், பொதுவாக அவர் பணியாற்றிய துறையில் உள்ள பொது வருமானம் மற்றும் இதர சூழ்நிலைகளை கோப்பிலுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட நபரின் வருமானம் உத்தேசமாக நிர்ணயம் செய்யப்படும்.

3. வருமானம் ஈட்டாத நபர் அதாவது குழந்தை, மாணவர், இல்லத்தரசி போன்றவர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்ய கோருவது இரண்டாவது வகையை சார்ந்ததாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்வது மிகவும் கடினம் என்று சொல்லத்தேவையில்லை.

4. நீதிமன்றம் பெரும்பாலும் வருமானம் ஈட்டாத பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு தொகை நிர்ணயம் செய்ய வெவ்வேறு கோட்பாடுகளை பின்பற்றுகிறது. அவ்வகையில் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டு தொகை அவ்வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் நியாயமானதாக இருக்க வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படுவதில் கருத்தியலான வருமானம் நிர்ணயம் செய்யப்படுவதும் உள்ளடங்கியது ஆகும். வழக்குகளில் கருத்தியலான வருமானம் கணக்கிடப்படும் போது, பல காரணிகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. உதாரணத்திற்கு மாணவர்களாக இருக்கும்பட்சத்தில் நீதிமன்றம் அவர்கள் என்ன படிப்பு படிக்கிறார்கள் அவர்களின் கல்வித் திறமை, குடும்ப பின்புலம் இதர விவரங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தான் பிற்காலத்தில் அவர்கள் எவ்வளவு சம்பாதித்திருப்பார்கள் என நிர்ணயம் செய்யப்படுகிறது. (**எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி எதிர் நியு இந்தியா அசூரன்ஸ் கோ. லிமிடெட்**, 2019 **எஸ்சிசி இணையதளம் எஸ்சி** 315.)

5. நீதிமன்றத்தால் இழப்பீடு கணக்கீடு செய்யும்படி கேட்கப்படுகிற வருமானம் ஈட்டாத ஒருவகையினர் இல்லத்தரசிகள். இவ்வழக்கில் உள்ளதைப் போன்று இல்லத்தரசிக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படுவது குறித்து இந்நீதிமன்றத்தால் முன்னதாகப் பல சந்தர்ப்பங்களில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகையில் மூவர் அமர் நீதியராயம் ஒன்று **லதா வாதுவா எதிர் பீகார் மாநிலம்**, (2001) 8 **எஸ்சிசி** 197 என்ற வழக்கில் ஒரு நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட தீ விபத்தின் போது பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு வழங்கும் போது இல்லத்தரசிகளுக்கு அவர்கள் இல்லத்தில் செய்த பணிகள் மற்றும் அவர்களது வயது ஆகியவற்றின் அடிப்படையில் இழப்பீடு வழங்கியுள்ளது. அவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

"10.**இறந்து போன <u>இல்லத்தரசிகளை பொறுத்து அவர்கள் குறிப்பிட்ட வருமானம் ஈட்டி வந்ததாக தகவல் ஏதும் இல்லாத காரணத்தினால் அவர்கள் இல்லத்திற்கு செய்து வந்த பணிகளின் அடிப்படையில் இழப்பீடு நிர்ணயம் செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது.</u>** இல்லத்தரசிகளின் வயது அடிப்படையில் ஏற்புடைய பெருக்கல் குறியீடு பின்பற்றப்பட்டுள்ளது. ஆனால் அதே நேரத்தில் இல்லத்தரசிகளால் தங்கள் இல்லத்திற்கு செய்யப்பட்டுள்ள சேவைகளின் அடிப்படையில் தொகை கணக்கீடு செய்யப்படும் போது ஒரு சிலருக்கு ஆண்டு தொகை ரூ.12,000/- என்றும், வேறு சிலருக்கு ரூ.10,000/- என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது மிகவும் குறைவாகும். உரிமைகோருநர்கள் இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்ய தகவல்களைக் கொடுக்க கடமைப்பட்டுள்ள நிலையில் இல்லத்தரசிகளால் செய்யப்படும் சேவைகளின் மதிப்பு குறித்து உரிய தகவல்கள் எதுவும் தரவில்லை என்பது உண்மை தான். அத்தகைய தகவல்கள் இல்லாத நிலையிலும்கூட **<u>இல்லத்தரசிகளால் தங்கள் முழு குடும்பத்தையும் நிர்வகிக்க செய்யப்படும் பலதரப்பட்ட சேவைகளை கருத்தில் கொண்டு சுமாரான மதிப்பீடாக மாதம் ரூ.3000/- என நிர்ணயம்</u>** செய்யப்பட்டு அதனடிப்படையில் ஆண்டிற்கு ரூ.36000/-... "

(முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது)

6.**<u>அருண்குமார் அக்ரவால் எதிர் நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனம் லிமிடெட்</u>** (2010) 9 **<u>எஸ்சிசி 218</u>** என்ற வழக்கில் மோட்டார் வாகன விபத்து ஒன்றில் இல்லத்தரசியின் இறப்பிற்கு இழப்பீடு வழங்குவது குறித்து ஆராயப்பட்ட போது, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

"26. **<u>இந்தியாவில் மனைவி வீட்டிற்கு செய்துள்ள பங்களிப்பு விலைமதிப்பற்றது மற்றும் பணத்தின் அடிப்படையில் கணக்கிட முடியாது என்பதும் நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஊதியம் ஏதுமின்றி மனைவியால் உண்மையான அன்புடனும் பாசத்துடனும் தன் குழந்தைகளுக்கும் கணவருக்கும் செய்யும் சேவைகள் மற்றும் குடும்பத்தை</u>**

நிர்வகித்தல் ஆகிய செயல்கள் வேறு நபர்கள் செய்யும் செயல்களுடன் சமமாக கருத இயலாது. ஒரு மனைவி/தாய் நேரம் பார்த்து வேலை செய்வது இல்லை. அவர் பொதுவாக அவர் பணியில் இருந்து, குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு எஜமானரின் கீழ் வேலை செய்யும் சூழலைத் தவிர, பகல் மற்றும் இரவு முழுவதும் தன் குடும்பத்திற்காகவே தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அவர், உணவு சமைப்பது, துணிகளை துவைப்பது போன்ற, தன் கணவர் மற்றும் குழந்தைகளின் அனைத்து தேவைகளையும் கவனித்து கொள்கிறார். சிறு குழந்தைகளுக்கு கற்பித்து அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு விலைமதிப்பற்ற வழிகாட்டுதலையும் வழங்குகிறார். ஒரு வீட்டு பணியாளர் அல்லது பணிப்பெண் உணவு சமைப்பது, துணிகள் துவைப்பது, பாத்திரங்களை கழுவுதல் வீட்டை சுத்தமாக வைத்தல் போன்ற பணிகளை செய்ய இயன்றாலும்கூட அவர் தனது கணவர் மற்றும் குழந்தைகளுக்கு தன்னலமற்ற சேவை செய்யும் ஒரு மனைவி/தாய்க்கு மாற்றாக இருக்க முடியாது. "

"27. **ஒரு மனைவி மற்றும் தாய் தனது கணவர் மற்றும் குழந்தைகளுக்கு செய்யும் சேவைகளின் அடிப்படையில் அதற்கான தொகையை கணக்கீடு செய்ய இயலாது. இருப்பினும் இழப்பீட்டு தொகை வழங்குவதற்காக இல்லத்தரசி / தாய் ஆகியோரது சேவைகளை கருத்தில் கொண்டு ஒரு தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.** இவ்வகையில் "சேவைகள்" என்பதற்கு ஒரு பரந்த பொருள் கொடுக்கப்பட்டு இறந்தவரின் தனிப்பட்ட கவனிப்பு அதாவது அவரது குழந்தைகளுக்கு தாயாகவும் கணவருக்கு மனைவியாகவும் கொடுத்த கவனிப்பு இழப்பிற்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்கப்பட வேண்டும். பாட்டிபோன்ற நெருங்கிய உறவினர்கள் குடும்பத்திற்கு சில தேவைகளை இறந்த நபரை போன்றுசெய்ய முன்வரும் காரணத்தினால் இழப்பீட்டு தொகையைக் குறைக்க இயலாது. "

(முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது)

மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பானது இந்நீதிமன்றத்தால் அன்மையில் **ராஜேந்திரசிங் எதிர் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (2020) எ'ஸசிசி ஆன்லைன் எஸ்சி 521** என்ற வழக்கில் பின்பற்றப்பட்டு அவ்வழக்கில் இறந்து போன இல்லத்தரசியின் கருத்தியலான வருமானம் கணக்கிடப்பட்டு அதனடிப்படையில் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

7. இத்தலைப்பு குறித்து மேற்கொண்டு விவாதிப்பதற்கு முன் அதன் பாலின இயல்பை கருத்தில் கொள்வது அவசியம். இந்தியாவில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 159.85 மில்லியன் பெண்களுக்கு "வீட்டு வேலை" தான் பிரதான வேலை எனவும், 5.79 மில்லியன் ஆண்களுக்கு மட்டுமே வீட்டு வேலை பிரதான வேலை என குறிப்பிடப்பட்டுள்ளது.

8. உண்மையில், சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்திய அரசின் புள்ளியில் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சகத்தின் தேசிய புள்ளியில் அலுவலகத்தின் அறிக்கையில் "இந்தியாவில் நேர பயன்பாடு -2019" நாட்டிலேயே முதன்முறையாக நேர பயன்பாடு குறித்து தகவல்கள் 1,38,799 குடும்பங்களில் இருந்து ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில் கணக்கிடப்பட்டு அதனடிப்படையிலான பாலின வேறுபாட்டை குறிப்பிடுகிறது. [1] அவ்வகையிலான கணக்கீட்டின்படி சராசரியாக ஒரு பெண் தினமும் 299 நிமிடங்கள் ஊதியமில்லாத வீட்டு சேவைகளில் செய்து வருகிறார் என்றும், அதே நேரத்தில் ஆண்கள் சராசரியாக 97 நிமிடங்கள் மட்டுமே செலவு செய்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது போல் ஒரு பெண் சராசரியாக நாள் ஒன்றுக்கு 134 நிமிடங்களுக்கு தன் குடும்ப உறுப்பினர்களுக்கு ஊதியம் ஏதுமின்றி அவர்களை பராமரிக்க நேரம் செலவு செய்வதாகவும், அதே நேரத்தில் ஆண்கள் 76 நிமிடங்கள் மட்டுமே செலவு செய்வதாகவும் தெரியவருகிறது. இவ்வகையில் இந்தியாவில் பெண்கள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 16.9 மற்றும் 2.9 சதவீதம் சராசரியாக ஊதியம் இல்லாத வீட்டு வேலைகளிலும் தனது குடும்ப உறுப்பினர்களை பேணுவதிலும் முறையே செய்து வருகின்றனர் என்றும் அவர்களுடன் ஒப்பிடும்போது ஆண்கள் சராசரியாக 1.7 மற்றம் 0.8 சதவீதம் மட்டுமே செய்து வருவதாக தெரியவருகிறது.

---

1 111 தேசிய புள்ளியியல் அலுவலகம், இந்தியாவில் நேரப்பயன்பாடு - 2019 (செப்டம்பர், 2020)

9. இவ்வகையில் மேற்படி நிலையானது இந்தியாவில் மட்டுமே உள்ள நிலை கிடையாது என்றும், உலகம் முழுவதும் அத்தகைய நிலையே உள்ளதாக தெரியவருகிறது. 2009 ம் ஆண்டு பிரான்ஸ் அரசால் நியமிக்கப்பட்ட ஒரு குழு ஜெர்மனி, இத்தாலி, பிரிட்டன், பிரான்சு, பின்லாந்து, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா ஆகிய ஆறு நாடுகளில் உள்ள தகவல்களை ஆராய்ந்ததிலும் மேற்கண்டவாறே விவரங்கள் தெரிய வந்தன:

"117. நேரப்பயன்பாட்டில் பாலின வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கவை. பரிசீலனையில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் **ஆண்கள் பெண்களை விட கூடுதலாக ஊதியம் தரும் வேலையில் நேரத்தை செலவிடுகிறார்கள். அதற்கு நேர்மறையாக பெண்கள் ஊதியம் ஈட்டாத வேலையில் கூடுதலான நேரம் செலவிடுகின்றனர்**. பெண்களை விட ஆண்கள் அதிக நேரம் ஓய்வெடுக்கின்றனர். அதாவது **பெண்கள் அதிகபட்சமான வீட்டு சேவைகளை செய்வதாலும் அதன்மூலமாக வீட்டிலுள்ள மற்ற உறுப்பினர்கள் நன்மை அடைகின்றனர்** ...."[5]

(முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது)

10. ஒரு இல்லத்தரசி செய்யும் பல்வேறு வேலைகளை கருத்தில் கொள்ளும் போது, வீட்டு வேலைக்கான ஒரு ஆண் செலவிடும் நேரத்தைவிட ஒரு பெண் செலவிடும் நேரம் அதிகம் என்பது எவ்வித ஆச்சர்யமும் இல்லை. ஒரு இல்லத்தரசி பெரும்பாலும் மொத்த குடும்பத்திற்கும் உணவு தயார் செய்கிறார். மளிகை பொருட்கள் மற்றும் பிற வீட்டு தேவைக்கான பொருட்களை வாங்குகிறார். வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்து நிர்வகித்து அலங்காரம், பழுதுபார்ப்பு, பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல், குழந்தைகளின் தேவைகள், குடும்பத்தில் உள்ள வயதான உறுப்பினர்களின் தேவைகளை நிவர்த்தி செய்தல், வரவு செலவு கணக்குகளை நிர்வகித்தல் மற்றும் பிற இதர வேலைகளை செய்கிறார். கிராப்புற வீடுகளில் வயலில் விதைத்தல், அறுவடை செய்தல், நடவு செய்தல் கால்நடைகளை மேய்ததல் போன்றவற்றிலும் இல்லத்தரசிகள் உதவிகள் புரிகிறார். **(அருண்குமார் அக்ரவால் (மேற்படி); நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் இளவர் தீபிகா அவரது காப்பாளர் மற்றும் அடுத்த சிநேகிதர் ரெங்கநாதன் மூலம், 2009) எஸ்சிசி இணையத்தளம் மெட். 828)** இருப்பினும் பல ஆண்டுகளாக இருந்து வரும் தவறான பிரச்சனைக்குரிய எண்ணமானது ஏதோ இல்லத்தரசிகள் எவ்வித வேலையும் செய்வதில்லை என்றும் அதன்காரணமாக ஒரு வீட்டின் பொருளாதார நிலைக்கு அவர் கூடுதலாக எதுவும்

செய்வது கிடையாது என்ற எண்ணமே இருந்துவருகிறது. அத்தகைய எண்ணம் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

11. **அருண்குமார் அக்ரவால்** (மேற்படி) தீர்ப்புரையில் உடன்படுகிற கருத்தில் இவ்வகையிலான மனச்சாய்வு எடுத்துரைக்கப்பட்டுள்ளது :

> "44. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் இந்த சார்பு நிலை அதிர்ச்சியளிக்கும் வகையில் உள்ளது. 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் சமைத்தல், பாத்திரங்களை சுத்தம் செய்தல், குழந்தைகளை பராமரித்தல், தண்ணீர் எடுப்பது, விறகு சேகரிப்பது போன்ற பணிகளை செய்யும் நபர்கள் தொழிலாளர்கள் அல்லாதவர்கள் என வகைப்படுத்தப்பட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பொருளாதார ரீதியில் லாபகரமான வேலையில் ஈடுபடாத பிச்சைக்கார்கள், விபச்சாரிகள், கைதிகளுக்கு சமமான நபர்களாக கருதப்பட்டுள்ளனர். இவ்வாறு வகைப்படுத்தப்பட்டதன் விளைவாக 36 கோடி(367 மில்லியன்) பெண்கள் 2001மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தொழிலாளர்கள் அல்லாதவர்களாக பிச்சைக்காரர்கள், விபச்சாரிகள் மற்றும் கைதிகளுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த முழு கணக்கெடுப்பு நடவடிக்கையும் பாராளுமன்ற சட்டம் ஒன்றின் கீழ் செய்யப்பட்டுள்ளது. "

12. உண்மையில், வீட்டு வேலைகளின் மதிப்புக்கு வரும் போது துரதிஷ்டவசமான மௌனம் ஒரு பிரச்சனையாக 1920 ம் ஆண்டு முதல் இருந்து வருகிறது. பொருளாதார நிபுணர் பிகோ அவ்வகையிலான வினோதத்தையும் முரண்பாடுகளையும் தேசிய வருமானத்திற்கான பெண்களின் பங்களிப்பு குறித்து கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

> " பெண்களால் செய்யப்படும் சேவைகள் அவை தொழிற்சாலையில் செய்யப்பட்டாலும் சரி குடும்பத்தில் செய்யப்பட்டாலும் சரி கூலிக்கு ஈடாக ஈவு தொகைக்குள் நுழைகின்றன. தாயாகவோ அல்லது மனைவியாகவோ ஒவ்வொரு குடும்பத்திற்குள்ளும் இலவசமாகச் செய்யப்படும் அதே சேவைகள் ஈவு தொகைக்குள் சென்றவடைவதில்லை. அதன்காரணமாக ஒரு ஆண் ஒரு வீட்டு

பணிபெண்ணையோ அல்லது சமையல் செய்யும் பெண்ணையோ திருமணம் செய்து கொண்டால் தேசிய ஈவுதொகை குறைகிறது." [3]

இந்தப் பிரச்சனை ஊதியம் இல்லாத வீட்டு வேலைகளை கருத்தில் கொள்ளாத புள்ளியல் மற்றும் பொருளாதாரத்தில் குறைத்து மதிப்பிடப்பட்ட பெண்களின் பங்கு 1970 களிலும் 1980 களிலும் பெண்ணியத் துறை பொருளாதாரத்தில் உள்ள நபர்களால் விமர்சிக்கப்பட்டது. [4]

13. இந்த பிரச்சனையை சுற்றி வளர்ந்து வரும் விழிப்புணர்வை கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு பொது பரிந்துரை எண் 17 ன்படி 1991 ம் ஆண்டு "பெண்களின் ஊதியம் ஈட்டாத செயல்களின் அளவீடுகள் நிர்ணயம் செய்தல் அவ்வகையில் மொத்த தேசிய உற்பத்தியில் அவர்களின் பங்கை பொது பரிந்துரை" என்று உறுதிப்படுத்தியது. "பெண்களின் ஊதியம் பெறாத உள்நாட்டு நடவடிக்கைகள் மொத்த நாட்டின் வளர்ச்சிக்கும் உதவக்கூடிய ஒன்று என்றும், அது பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான காரணியை தெளிவாக்கும்" என்றும் உறுதிப்படுத்தியது.

14.மேற்படி பொது பரிந்துரையானது இந்தியா அங்கீகரித்த ஒப்பந்தமான பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான ஒப்பந்தத்தின் வகுமுறைக்கூறின் 11 அடிப்படையிலானதாகும்.

15. அதன்காரணமாக இல்லத்தரசி ஒருவரின் கருத்தியலான வருமானத்தை நிர்ணயம் செய்வதற்கு மிக முக்கியமானதாகும் . அது பல பெண்கள் தாமாக விருப்பப்பட்டோ அல்லது சமுதாய, கலாச்சார காரணங்களினாலோ இல்லத்தரசிகளாக இருந்து பணிகள் செய்து வருவதற்கு வழங்கப்படும் அங்கீகாரம் ஆகும். இல்லத்தரசிகள் உழைப்பு, சேவைகள் மற்றும் தியாகங்களின் மதிப்பை நாட்டின் சட்டங்களும் நீதிமன்றங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன

---

3 33 செசில் பி.கோ. நலன் பொருளியல், 44 (1920)

444 ஐக்கிய நாடுகள் ஐரோப்பாவிற்கான பொருதாரக்குழு, ஊதியம் இல்லாத வீட்டு வேலையை மதிப்பீடு செய்ய உதவும் வழிகாட்டி, 2(2017)

என்ற முக்கியமான கருத்து சமூகத்திற்கு சமிக்ஞை செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கைகள், பாராம்பரியமாக பொருளாதார பகுப்பாய்வுகளில் சேர்க்கப்படாமல் இருந்திருந்தாலும்கூட, தற்போது இல்லத்தரசிகளின் பணி குடும்பத்தின் பொருளாதார நிலைக்கும் தேசத்தின் பொருளாதாரத்திற்கும் பங்களிக்கின்றனர் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளச் செய்கிறது. இது மாறி வரும் அணுகுமுறைகள் மற்றும் மனநிலையின் பிரதிபலிப்பாகவும் சர்வதேச சட்ட கடமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதையும் காட்டுகிறது. மேலும் மிக முக்கியமாக இது அரசமைப்பு பார்வையில், சமூக சமத்துவம் மற்றும் அனைத்து தனிநபர்களுக்கும் வாழ்வின் கண்ணியத்தை உறுதி செய்வதற்கான முக்கியமான படியாகும்.

16. இல்லத்தரசி ஒருவரின் கருத்தியலான வருமானம் எவ்வாறு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கேள்விக்கு திரும்பும்போது, அதற்கு நிலையான ஒரு அணுகுமுறை இருக்கமுடியாது. இந்நிலையில் இல்லத்தரசிகள் செய்யும் வேலைகளுக்கு ஒரு தோராயமான பொருளாதார மதிப்பு நிர்ணயம் செய்ய, முடியாத காரியமாக இருந்தாலும் கூட, நீதிமன்றம் முயலுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் இழப்பீட்டுத் தொகையானது வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதை நீதிமன்றங்கள் உறுதி செய்ய வேண்டும். **(ஆர்.கே. மாலிக் எதிர் கிரண் பால்(2009) 14 எஸ்சிசி 1 பார்க்க)**

17. இல்லத்தரசியின் கருத்தியலான வருமானத்தை ஒரு வகையில் மோட்டார் வாகன திருத்தப்பட்ட சட்டம் 2019 ன் படி விலக்கப்பபட்ட மோட்டார் வாகன சட்டம் 1988 2 வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரத்தின்படி கணக்கீடு செய்யலாம். 2 வது அட்டவணையின் படி இல்லத்தரசியின் வருமானம் ஆனது கணவரின் வருமானத்தில் 3 ல் ஒரு பங்காக கணக்கீடு செய்யப்படவேண்டும். இம்முறையே **அருண்குமார் அகர்வால்** (மேற்படி) **வழக்கிலும்** ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் விகிதத்தை 3 ல் ஒரு பங்காக நிர்ணயிப்பதன் பின்னனி மிகவும் தெளிவாக இல்லை. [**அருண்குமார் அகர்வால்** (மேற்படி) **பார்க்க**]

18. மேற்கூறியவற்றை தவிர இப்பிரச்சனையை பொறுத்து இல்லத்தரசியின் கருத்தியலான வருமானத்தைக் கணக்கீடு செய்ய உள்ள மற்ற முறைகளை பற்றி சில

கருத்துக்கள் உள்ளன.[5] இவ்வகையில் சில முறைகளை மெட்ராஸ் உயர்நீதிமன்ற இருவர் அமர் நீதிராயம் **இளவர் தீபிகா (மேற்படி)** என்ற வழக்கில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

" 10. மோட்டார் வாகன சட்டம் 2 வது அட்டவணை விபத்துக்கு முன் வருமானம் இல்லாதவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இல்லத்தரசியை பொறுத்து அவரது கணவரின் வருமானத்தில் 3 ல் ஒரு பங்கை அவரது வருமானமாக கருத்தில் கொள்ளப்படவேண்டும். இணையதளத்தை ஆராயும்போது ஒரு இல்லத்தரசியின் ஊதியம் பெறாத உழைப்பின் மதிப்பை வெவ்வேறு முறைகள் மூலம் புரிந்துகொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **முதல் வாய்ப்பு செலவு அதாவது இல்லத்தரசி வீட்டில் இருக்காமல் ஒரு வேளை வேலைக்கு சென்றிருந்தால் என்ன வருமானம் ஈட்டியிருப்பாரோ அதனடிப்படையில் கணக்கீடு செய்வதாகும். அதாவது வாய்ப்பை இழந்ததன் அடிப்படையில் கணக்கீடு செய்வது. இரண்டாவதாக கூட்டாண்மை முறை அதாவது திருமணம் என்பது ஒரு சமமான பொருளாதார கூட்டாண்மை என்ற அடிப்படையில் அவ்வகையில் இல்லத்தரசியின் ஊதியமானது அவரது கணவரின் வருமானத்தில் சரிபாதியாக மதிப்பீடு செய்யப்படுகிறது. மற்றொரு முறை மதிப்பீடு செய்வது ஒரு இல்லத்தரசியின் பணிகளை ஊதியம் பெறும் பணியாட்களை வைத்து செய்தால் அதற்கு எவ்வளவு செலவாகுமோ அதன் அடிப்படையில் கணக்கீடு செய்வதாகும், இவ்வாறு கணக்கீடு செய்வது மாற்றுமுறை என அழைக்கப்படுகிறது.**"

(முக்கியத்துவம் வழங்கப்பட்டது)

19. இருப்பினும் மேற்கூறிய அனைத்து முறைகளும் பரிந்துரைகள் மட்டுமே என்பது நினைவில் கொள்ளப்படவேண்டும். ஒரு தனி நபரால் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி தன் நெருக்கமானவர்களுக்கும் பிரியமானவர்களுக்கும் கொடுக்கப்படும் தனது பங்களிப்பை சரியான கணக்கீடு அல்லது சூத்திரம் மூலமாக குறிப்பிட்டு கண்டறிய இயலாது. எனவே இவ்வகையில் நீதிமன்றத்தின் முயற்சியானது சிறந்த முறையின் அடிப்படையில் இல்லத்தரசியின் உத்தேச பங்களிப்பிற்கான மதிப்பீட்டை கணக்கீடு செய்து

55555 அன் சடேயு சந்தை அல்லாத உற்பத்தி பொருட்களின் மதிப்பு என்ன?, ஓஇசிடி பொருளாதாரம் படிப்பு எண்.18 (1992); ஐரோப்பாவுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார ஆணையம், மேல்குறிப்பு 7.

அதனடிப்படையில் உண்மையான தோராயமான இழப்பீட்டு தொகையை கணக்கீடு செய்து வழங்குவதேயாகும்.

20. இல்லத்தரசியின் செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கு எந்த முறையை நீதிமன்றங்கள் தேர்ந்தெடுத்தாலும் அது வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை பொறுத்தானதாக இருக்கவேண்டும். நியாமான இழப்பீடு வழங்கப்படுவதை நீதிமன்றம் மனதில் கொள்ளவேண்டும். அது குறைத்துக்கூறப்பட்டதாகவோ அல்லது மிகவும் தாராளமாக உரிமைகோருநர்களுக்கு வழங்கப்படும் கொடையாகவோ அமைய கூடாது. **(நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரணாய் சேதி** (2017) **16 எஸ்.சி.சி. 680, காஜல் எதிர் ஜெகதீஷ் சந்த்** (2020) **4 எஸ்.சி.சி. 413)**

21. ஒருமுறை கருத்தியலான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டு விட்டால், எதிர்கால பலன்களுக்கான மதிப்பீடு கூட்டப்பட்டு வழங்கப்படவேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. ஆரம்பத்தில் இந்நீதிமன்றத்தால் எதிர்கால வாய்ப்புகள்/பலன்களுக்கு இழப்பீடு வழங்குவதைப் பொறுத்து பாதிக்கப்பட்ட நபரின் பணியின் ஸ்திரத்தன்மையை பொறுத்தானதாக கருதப்பட்டது. **(பொது மேலாளர், கேரளா மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம், திருவனந்தபுரம் எதிர் சூசம்மா தாமஸ்,** (1994) **2 எஸ்சிசி 176, சர்ளா தீட்சித் எதிர் பல்வந்த் யாதவ்,** (1996) **3 எஸ்சிசி 179 பார்க்க).** பாதிக்கப்பட்ட நபரின் பணியின் ஸ்திரத்தன்மையை பொறுத்து எதிர்கால வாய்ப்புகளுக்கு இழப்பீடு வழங்குவது **சர்ளா வர்மா (ஸ்ரீமதி) எதிர் டெல்லி போக்குவரத்துக்கழகம்,** (2009) **6 எஸ்.சி.சி. 121** என்ற வழக்கிலும் இந்நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டு கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" 24. **சூசம்மா தாமஸ், (1994) 2 எஸ்.சி.சி. 176,** என்ற வழக்கில் இந்நீதிமன்றம் வருமானத்தை சுமார் 100 சதவீதம் அதிகரித்தது. சர்ளா தீட்சித் [(1996) 3 எஸ்.சி.சி. 179] என்ற வழக்கில் வருமானம் 50 சதவீதம் அதிகரிக்கப்பட்டது. அபாட்டி பெஸ்பாரூவா [(2003), 3 எஸ்.சி.சி. 148] என்ற வழக்கில் வருமானம் 7 சதவீதம் அதிகரிக்கப்பட்டது. இவ்வகையில் கணிக்கமுடியாத, நிச்சயமற்ற தன்மை உள்ள காரணத்தினால் நாங்கள் ஒரு விதியை உருவாக்க **அதாவது காலஞ்சென்ற நபர் 40 வயதிற்குள்ளான நபராகவும் நிரந்தர பணி செய்துகொண்டிருந்த நபராக இருந்தால் அவரது உண்மையான சம்பளத்துடன் அதன் 50 சதவீதத்தை கூட்டி கூடுதல்**

சம்பளமாக எதிர்கால வாய்ப்புகளை பொறுத்து வழங்கப்படவேண்டும் என கருதுகிறோம். (உண்மையான வருமானம் என்பது ஆண்டுவருமானத்திலிருந்து வரித்தொகையை கழித்த பின் வரும் தொகை ஆகும்.) காலஞ்சென்ற நபர் 40 முதல் 50 வயதிற்குள்ளான நபராக இருந்தால் 30 சதவீதம் மட்டுமே கூட்டப்படவேண்டும். காலஞ்சென்ற நபர் 50 வயதிற்கு மேலான நபராக இருந்தால் எதுவும் கூட்டப்படக்கூடாது. சாட்சியங்கள் அடிப்படையில் வேறு சதவீதம் கூட்டப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டாலும் கூட வெவ்வேறு அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டு வெவ்வேறு முறையில் கணக்கீடு செய்யப்படும் காரணத்தினால் அதனை தரப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. **காலஞ்சென்ற நபர் சுயதொழில் செய்து வந்த நபராகவோ அல்லது வருடாந்திர அதிகரிப்பு அல்லாத நிலையான சம்பளம் வாங்கும் நபராக இருந்திருந்தால் நீதிமன்றங்கள் பொதுவாக அவர் இறக்கும் பொழுது வாங்கிய உண்மையான வருமானத்தைதான் கருத்தில் கொள்ளும். அதில் இருந்து மாறுபடுவது அரிதான மற்றும் விதிவிலக்கான வழக்குகளில் மட்டுமே சிறப்பான சூழ்நிலைகள் இருந்தால் மேற்கொள்ளப்படவேண்டும்".**

(முக்கியத்துவம் வழங்கப்பட்டது)

22. இருப்பினும் எதிர்கால வாய்ப்புகள்/பலன்களை பொறுத்து இந்நீதிமன்றத்தின் ஐவர் அமர் நீதியராயம் **பிரணாய் சேதி (மேற்படி) வழக்கில்** வழங்கிய தீர்ப்பின் காரணமாக ஒரு மாற்றம் ஏற்பட்டது. இந்நீதிமன்றம் அவ்வழக்கில் எதிர்கால வாய்ப்புகள் குறித்த பலனை சுயதொழில் செய்யும் நபர்கள் அல்லது நிலையான சம்பளம் பெறுபவர்களுக்கும் நீட்டித்து கீழ்கண்டவாறு முடிவு செய்தது.

"57. நாங்கள் கவனமாக பரிசீலித்தன் அடிப்படையில் ஒரு தரநிலைபடுத்தப்பட்ட கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என எண்ணுகிறோம், **உண்மையில் மேற்படி கோட்பாட்டினை சுயதொழில் செய்பவர்கள் மற்றும் நிலையான சம்பளம் பெறுபவர்களுக்கு பின்பற்றக்கூடாது என்பதில் எந்த ஒரு நியாயமும் இல்லை. ஒரு நபர் இறக்கும் பொழுது அவர் பெற்ற உண்மையான வருமானத்தை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் அத்துடன் எதிர்கால வாய்ப்புகள் குறித்து எந்த தொகையும் கூட்டப்படக்கூடாது என்பதில் எந்த நியாயமும் இல்லை. இழப்பீடு தொகையை நிர்ணயம் செய்ய வருமானத்தை கணக்கிடும் போது எதிர்கால பலன்கள்/ வாய்ப்புகள் குறித்து**

சேர்த்து கணக்கீடு செய்யப்படவேண்டும், அவ்வாறு கணக்கீடு செய்தால்தான் அந்த இழப்பீடு ஆனது சட்டப்பிரிவு 168 ன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நியாயமான இழப்பீடாக இருக்கும். ஒரு காலஞ்சென்ற நபர் நிரந்தர வேலையில் ஆண்டுதோறும் வருமான உயர்வுடன் கூடிய பணியில் இருந்தால் அதில் ஏற்கத்தக்க உறுதி உள்ளது. அத்தகைய நிலையில் நிலையான வருமானம் கொண்ட காலஞ்சென்ற நபரின் வாரிசுகளுக்கு எதிர்கால வாய்ப்புகள் குறித்த பலன் இழப்பீடு கணக்கீடு செய்யும் போது கிடையாது என்று கூறுவது எதிர்மறையானது. இரண்டுக்கும் உள்ள வேற்றுமையானது ஒரு புறம் நிலையானதாகவும் மறுபுறம் நிச்சயமான ஒன்றாகவும் இருக்கும் அது தவறான எண்ணத்தை வெளிப்படுத்தும். **அதற்கு காரணம் விலைவாசி உயர்வு சுயதொழில் செய்யும் நபரையும் பாதிக்கும் அது தவிர ஒரு நபர் அவரது வருமானத்தை அதிகரிக்க எப்போதும் இடைவிடாது முயற்சி செய்து வருவார். நிலையான வேலையில் உள்ள சம்பளம் வாங்கும் நபரின் வாங்கும் திறன் அவரது ஊதியத்தில் உயர்வுகள் வழங்கப்படுவது காரணமாகவும் அவரது ஊதியம் திருத்தப்படுவது காரணமாகவும் அவரது பணி நிபந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுவது காரணமாகவும் தனியார் துறையில் எப்போதும் ஒரு போட்டி மனப்பான்மை கூடுதலான சம்பளம் பெறவேண்டும் என்பதற்காக தனது தகுதியை உயர்த்திக் கொள்ள ஊழியர்கள் மத்தியில் உள்ளது. அதுபோல் சுயதொழில் செய்யும் நபர் தனது பலன்களை சேகரிப்பதற்கு தனது கட்டணங்கள் மற்றும் ஊதியத்தை கூட்டி அதன்மூலம் அதே வசதி வாய்ப்புகளுடன் வாழலாம்.** ... இவ்வகையில் **ஒட்டுமொத்த காரணிகளை அதாவது காலமாற்றம், மாறி வரும் சமூகம், விலைவாசி உயர்வு, விலைக்குறியீட்டில் உள்ள மாற்றம் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையை பின்பற்றும் மனித மனப்பாண்மை போன்றவற்றை கருதும் போது** காலஞ்சென்ற நபர் 40 வயதிற்குள்ளான நபராக இருந்தால், காலஞ்சென்ற நபரின் நிரூபிக்கப்பட்ட வருமானத்தில் கூடுதலாக 40 சதவீதம் அவரது எதிர்கால வாய்ப்புகளை கருதி வழங்கப்படவேண்டும் எனவும், காலஞ்சென்ற நபர் 40 முதல் 50 வயதிற்குள்ளான நபராக இருந்தால் கூடுதலாக 25 சதவீதம் வழங்கப்படவேண்டும் என்பது நியாயமானதாக இருக்கும்."

(முக்கியத்துவம் வழங்கப்பட்டது)

23. எதிர்கால வாய்ப்புகள் குறித்து வழங்கப்படும் இழப்பீடானது இனி மேற்கொண்டு ஒரு

நபர் செய்து வரும் தொழில் வகையை பொறுத்தோ, அது நிரந்தரமானதா இல்லையா, என்பதை பொறுத்தானதோ அல்ல, ஆனால் இழப்பீடு சதவீதமானது மேற்படி அவற்றின் அடிப்படையிலானதாக இருக்கும். எதிர்கால வாய்ப்புகளை பொறுத்து இழப்பீடு வழங்க வேண்டியது வாழ்க்கையின் எதார்த்தம், குறிப்பாக பணவீக்கம், தனிநபர்கள் தங்கள் சூழ்நிலைகளையும் தங்கள் அன்புக்குரியவர்களின் சூழ்நிலைகளையும் மேம்படுத்துவதற்கான தேடுதல் ஊதிய உயர்வு விகிதங்கள், பணியின் தரத்தில் அனுபவத்தின் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிட்டு நீதிமன்றத்தால் வழங்கப்படும் இழப்பீடு நியாயமானதாக இருக்க வேண்டும்.

24. மேற்கூறிய காரணத்தை கருத்தில் கொள்ளும் போது, முதல் வகையை சார்ந்தவர்கள் அதாவது பாதிக்கப்பட்ட நபர்கள், பணியாற்றி வந்திருந்தாலும்கூட, உரிமைகோருநர்களால் அவர்களது வருமானத்தை நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலாத நிலையில், அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஏதோ ஒரு பணியில் பணிபுரிந்துள்ளார் என்பது மட்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் தொடர்ச்சியாக அவர் வருமானமும் ஈட்டி வந்திருப்பார் என கருதப்பட வேண்டும். கருத்தியலான வருமானம் நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில், பிற்கால வாய்ப்புகளை பொறுத்து, பாதிக்கப்பட்ட நபரின் வருமானம் நிரூபிக்கப்படவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு மட்டும் வேற்றுமைபடுத்த இயலாது.

25. இரண்டாவது வகை வழக்குகள் அதாவது ஊதியம் ஈட்டாத பாதிக்கப்பட்ட நபர்களுக்கான கருத்தியலான வருமானத்தை பொறுத்து குறிப்பாக இல்லத்தரசிகளை பொறுத்து இந்தக் கோட்பாடு மேலே கூறப்பட்டுள்ள அதே வீச்சில் பொருந்தும். கருத்தியலான வருமானம் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் பணவீக்கத்தின் விளைவுகள் சமமாக பொருந்தும். திறமையில் அனுபவத்தின் காரணமாக ஏற்படும் மேன்மைகள், குடும்பத்தில் வேலை செய்யும் களத்தில் ஏற்படாது என மேற்கொண்டு எவரும் கூறமுடியாது. விரிவாக விவாதிக்கப்படவில்லை என்றாலும் கூட இந்நீதிமன்றம் கருத்தியலான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் கூட எதிர்கால பலன்கள் வழங்கி வருகிறது என எனது சகோதரர் மாண்புமிகு நீதியரசர் திரு. சூரிய காந்த் அவர்கள் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. **[ஹெம்ராஜ் எதிர் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், (2018)**

15 எஸ்சிசி 654, சுனிதா டோகாஸ் எதிர் நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், (2019) 20 எஸ்சிசி 688]

26. எனவே மேற்கூறியவற்றின் அடிப்படையில், இல்லத்தரசிகளைப் பொறுத்து கருத்தியலான வருமானம் கணக்கீடு செய்வது மற்றும் அவர்களுக்கு எதிர்கால வாய்ப்புகள் கருத்தில் கொண்டு இழப்பீடு வழங்குவது ஆகியவற்றைப் பொறுத்து கீழ்கண்ட பொது அவதானிப்புகள் வழங்கப்படுகின்றன:

அ) இல்லத்தரசியை பொறுத்து பண அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்பது சட்டப்படி ஒரு நிலைநிறுத்தப்பட்ட கோட்பாடு ஆகும்.

ஆ) வீட்டு வேலைகளில் பாலின தன்மையின் அடிப்படையில் ஆண்களுடன் ஒப்பிடும் பொழுது அதிக சதவீத பெண்கள் ஈடுபட்டு வருவதால், இல்லத்தரசியின் கருத்தியலான வருமானத்தை நிர்ணயம் செய்யவேண்டியது சிறப்பு முக்கியத்துவம் அடைகிறது. அது இல்லத்தரசிகளின் உழைப்பு, பணிகள் மற்றும் தியாகங்களை அங்கீகரிப்பதாகவும் மாறி வரும் அணுகு முறைகளின் பிரதிபலிப்பாகவும் இருக்கும். இது நமது தேசத்தின் சர்வதேச சட்ட கடமைகள் மற்றும் நமது அரசமைப்பு அடிப்படையிலான சமூக சமத்துவம் மற்றும் அனைவருக்கும் கண்ணியத்தை உறுதி செய்தல் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

இ) ஒரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் இல்லத்தரசியின் கருத்தியலான வருமானத்தை நிர்ணயம் செய்ய பல்வேறு முறைகளை நீதிமன்றம் பின்பற்றலாம்.

ஈ) ஒரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் கணக்கிடும் முறையை தேர்வு செய்து அதனடிப்படையில் கருத்தியலான வருமானத்தை நீதிமன்றம் முடிவு செய்யும் போது அந்த இழப்பீட்டு தொகை மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டதாகவோ அல்லது மிகவும் தாராளமாக மதிப்பிடப்பட்டதாகவோ இல்லாமல்

நியாயமான ஒன்றாக இருக்கவேண்டும் என்பதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்.

உ) அவ்வழக்குகளில் பிற்கால வாய்ப்புகள், கருத்தியலான வருமானத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படுவது, நியாயமான இழப்பீட்டு தொகையின் ஒரு அங்கமாகும்.

27. மேற்கண்ட அவதானிப்புகளுடன், என் கற்றறிந்த சகோதரரின் கருத்துரையுடன் நான் உடன்படுகிறேன்.

மேல்முறையீடுகள் பகுதியாக அனுமதிக்கப்பட்டன.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."